# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | ஜெகதீஸ்வரன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | சண்முகசுந்தரம் | தொழில் | .. | சுயதொழில் |
| வயது | .. | 42 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | மகுடஞ்சாவடி | நாள் | .. | 16.03.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. ஜெகதீஸ்வரன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

முதல் விசாரணை .. 16.03.2022

அசல் வழக்கு எண் .. 313/2015

வா.சா.3 – ஜெகதீஸ்வரன் - சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட சாட்சி வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டார்.

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. பாலகிருஷ்ணன் என்பவர் சாட்சியம் சொல்ல என்னை அழைத்துவந்துள்ளார் என்று கூறினால், சரிதான். வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால், முன்பகுதியில் அரசு தரப்பில் கட்டிடங்கள் கட்டியுள்ளார்கள், அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் கிராம சேவை மையம், பொது கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வழக்கு சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும், வாதிக்கு நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / ஜெகதீஸ்வரன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.